**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS
(கு.ந.வி.தொ.பிரிவு ~~154~~ -இன் கீழ்)

C 8044348

1. District மாவட்டம்: Krishnagiri | PS காவல்நிலையம்: V&AC | Year ஆண்டு: 2024 | FIR No. மு.த.அ. எண்: 02/AC/2024 | Date நாள்: 12/07/2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as ammended in 2018 | Sections பிரிவுகள்: 7(a) r/w
   (ii) Act சட்டம்: Bharathiya Nagarik | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Suraksha Sanhita | Sections பிரிவுகள்: 106.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் : | Date to நாள் வரை : Before 04.00hrs on. 12/07/2024
   Time Period நேர அளவு | Time from நேரம் முதல் : | Time to நேரம் வரை :
   (b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : | Time நேரம் : 12/07/2024 at 14.00 hrs.
   (c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம் :

4. Type of Information Written/ Oral தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக: Through sources.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரம், திசையும்: RTO Twoway check post, Hosur- Bagalur Road, Nallur, Krishnagiri Dt. at about 55 kms.
   Beat Number முறைக் காவல் எண் | (b) Address முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த காநிபெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: R. Vadival | (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்: T. Raman
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 42 | (d) Nationality நாட்டினம்: Indian | (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்: —
   Date of Issue வழங்கப்பட்ட நாள்: — | Place of Issue வழங்கப்பட்ட இடம்: —
   (f) Occupation தொழில்: Dy. Supdt. of Police | (g) Address முகவரி: o/o the Deputy Superintendent of Police Vigilance & Anti-corruption, Krishnagiri

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tmt. A. Sandal Uprasia Mary, age 57, w/o Late Arockia Samy. Motor Vehicle Inspector (Non Technical), RTO Two way check Post, Hosur Bagalur Road, Nallur, Krishnagiri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any :
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுகட்குட்பட்ட குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ...................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ...................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Suo-moto

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அதிகாரியின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

12/07/2024 15.00hrs.

Name பெயர் R. Vadivel
Rank நிலை Deputy Superintendent of Police, Vigilance & Anti-Corruption Krishnagiri

9

**கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/AC/2024 U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 r/w U/s 106 Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வ.எண்.12-ன் தொடர்ச்சி.**

12.07.2024 ஆம் தேதி அதிகாலை 04.00 மணியளவில் நான் அலுவலக பொறுப்பில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் To பாகலூர் சாலையில் நல்லூரில் அமைந்துள்ள போக்குவரத்துத் துறையின் பல்நோக்கு பாகலூர் சோதனை சாவடியில் உள்ள அலுவலர்கள் நேரடியாகவும் மற்றும் தனி நபர்கள் மூலமாகவும் வெளி மாநிலத்தில் இருந்து தமிழ் நாட்டிற்குள் நுழையும் வாகனங்கள் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கு செல்லும் வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதாகவும், நடை சீட்டுகளில் முத்திரை பதிப்பதாகவும் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன்பேரில் இணக்க கட்டணம் விதிக்காமல் அனுப்பி விடுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அரசு சாட்சிகள் திருமதி.R.தீபா, துணை வட்டாட்சியர் / வட்ட வழங்கல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் திரு.G.இராஜலிங்கம், வருவாய் ஆய்வாளர், பேரிகை உள்வட்டம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர் முன்னிலையில் 12.07.2024 ஆம் தேதி காலை 05.50 மணி முதல் காலை 11.30 மணி வரை அந்த சோதனை சாவடியில் காவலர் 2062 செல்வி.R.சரண்யா மற்றும் காவல் குழுவினருடன் என்னால் ஒரு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் சோதனையின் போது மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. A.சாண்டல் யூப்ரேசியா மேரி அவர்களால் அரசு கணக்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் 11.07.2024 ஆம் தேதி காலை 08.00 மணி முதல் 12.07.2024 ஆம் தேதி காலை 06.00 மணி வரையில் வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.42,695/- என்று ஆஜர்படுத்தினார். மேற்படி பணத்தை அரசு கணக்கில் வசூல் செய்யப்பட்ட அச்சுப் பிரதியுடன் அரசு சாட்சிகளின் முன்னிலையில் ஒப்பிட்டுப்பார்க்கையில் அதில் பணம் அதிகமாக இருந்தது. அதிகப்படியாக இருந்த பணத்தை பற்றி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. A.சாண்டல் யூப்ரேசியா மேரி அவர்களிடம் கேட்க, அது வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் வாகன

ஓட்டுனர்களால் தனக்கு தனியாக கொடுக்கப்பட்ட பணம் என்று தெரிவித்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 22 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.11,000/-மும், 100/- ரூபாய் தாள்கள் 289 எண்ணிக்கையில் ரூ.28,900/-ம் ஆக மொத்தம் ரூ.39,900/- இருந்தது. அந்தப் பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. A.சாண்டல் யூப்ரேசியா மேரி அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் ரூ.39,900/- என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. பிறகு மேற்படி அலுவலகத்திற்கு வெளியே வாகனங்களை நிறுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு நபர்களை அழைத்து விசாரிக்க அவர்களது பெயர் 1) A.ஜோசப் உதிரியம் மற்றும் 2) G.பிரகாஷ் என்றும் என்றும் சோதனை சாவடியில் இடைதரகர்களாக இருந்துவருவதாகவும் தெரிவித்தார்கள். பிறகு தனிநபர் திரு. A.ஜோசப் உதிரியம் என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி தனது சட்டையின் இடதுபக்க மேல்புற வெளி பாக்கெட்டிலிருந்து 90/- ரூபாய் எடுத்து ஆஜர் செய்து தன்னுடைய கை செலவிற்க்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பிறகு அங்கிருந்த மற்றொரு தனி நபரான திரு. G.பிரகாஷ் என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி தனது சட்டையின் இடதுபக்க மேல்புற வெளி பாக்கெட்டிலிருந்து 200/- ரூபாய் எடுத்து ஆஜர் செய்து தன்னுடைய கை செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. A.சாண்டல் யூப்ரேசியா மேரி அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் ஆம் என்று சொல்லி அவருடைய சட்டையின் வலதுபுற கீழ் பாக்கெட்டிலிருந்து ரூ.5,000/- ஐ எடுத்து ஆஜர் செய்து தான் அலுவலுக்கு வரும்போது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததாலும், அலுவலகத்தில் பராமரித்துவரும் தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் அதற்கான உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பிறகு மேற்படி உதவியாளர் இருக்கை மற்றும் அந்த அறை முழுவதும் சாட்சிகள் முன்னிலையில் சோதனை இடப்பட்டது. அப்போது மேற்படி உதவியாளர் இருக்கைக்கு இடதுபுறத்தில் இருந்த மர மேசையில் மீது இருந்த ஒரு KORES PENCIL CARBON PAPER என்ற கார்பன் அட்டையில் பணத்தாள்கள்

இருந்தன. அந்தப் பணத்தைப் பற்றி அவரிடம் கேட்க, அந்த பணம் வாகன ஓட்டுனர்களால் கொடுக்கப்பட்ட பணம் என்று தெரிவித்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 22 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.11,000/-மும், 200 ரூபாய் தாள்கள் 32 எண்ணிக்கையில் ரூ.6,400/- மும், 100/- ரூபாய் தாள்கள் 23 எண்ணிக்கையில் ரூ.2,300/-ம் மற்றும் 50/- ரூபாய் தாள்கள் 8 எண்ணிக்கையில் ரூ.400/-ம் ஆக மொத்தம் ரூ.20,100/- இருந்தது. அந்தப் பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. A.சாண்டல் யூப்ரேசியா மேரி அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு அரசு சாட்சிகளை அழைத்துக்கொண்டு மோட்டார் வாகன ஆய்வாளரின் அறையினை சோதனை செய்யப்பட்டது. மேற்படி அறையில் கிழக்குமுகம் பார்த்தவாறு ஒரு இருக்கையும், அதற்கு எதிரே ஒரு மர மேசையும் இருந்தது. மேற்படி மர மேசையினை சோதனை செய்ததில், மர மேசையின் கீழ் பகுதியில் இருந்த அறையில் ஒரு காக்கிநிற கவரில் 500/- ரூபாய் நோட்டுகள் கட்டாக இருந்தது. அந்த பணத்தை சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 281 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.1,40,500/- இருந்தது. அந்தப் பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. A.சாண்டல் யூப்ரேசியா மேரி அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு, மேற்படி அலுவலகத்திற்கு மேற்குபுறத்தில் கிழக்கு பார்த்தவாறு இருந்த பதிவேடுகள் அறையினை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. அப்போது, மேற்படி அறையின் தெற்குபுற சுவரை ஒட்டி ஐந்து பகுதிகளாக இருந்த இரும்பு ரேக்கின் மேலிருந்து கீழ் நான்காவது பகுதியில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு பின்புறத்தில் 500 ரூபாய் மற்றும் 200 ரூபாய் தாள்கள் கட்டாக இருந்தது. அந்த பணத்தை சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 138 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.69,000/-ம், 200/- ரூபாய் தாள்கள் 100 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.20,000/-ம், ஆக மொத்தம் ரூ.89,000/- இருந்தது. அந்தப் பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. A.சாண்டல் யூப்ரேசியா மேரி அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக 12.07.2024 ஆம் தேதியன்று காலை 05.50 மணி முதல் காலை 11.30 மணிவரையில் என்னால்

ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. அதன் நகலை மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. A.சாண்டல் யூப்ரேசியா மேரி அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பிறகு கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.2,89,500/- உடன் கிருஷ்ணகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து பொது ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. A.சாண்டல் யூப்ரேசியா மேரி என்பவர் மீது வாகன ஓட்டுனர்களுக்கு தனது அலுவல் பணியை முறையற்ற வகையிலும், நேர்மையற்ற முறையிலும் செய்து கொடுத்ததற்காக அவர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்ற குற்றத்திற்காக இன்று 12.07.2024 ஆம் தேதி 14.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/AC/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 r/w u/s 106 Bharatiya Nagarik Suraksha Sanhita 2023-ன்படி குற்றவழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

12/07/2024

காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு
பிரிவு
கிருஷ்ணகிரி மாவட்டம்.